**GOVERNMENT OF PUDUCHERRY**
**TRANSPORT DEPARTMENT**

**No.4/TD/TC/PA/2017** **Puducherry, dt. 11.04.2017**

**PRESS RELEASE**

**TRANSPORT DEPARTMENT'S REVENUE INCREASES BY 25%**

The revenue collection of Transport Department has increased from Rs.69.06 Crores in 2015-16 to Rs.86.86 Crores in 2016-17. The revenue increase in the year 2016-17 is about 25% more than that of the financial year 2015-16.

Originally only one entry checkpost was functioning at Gorimedu. Starting from 2013 onwards, additionally 4 entry Checkposts at Kanagachettikulam, Kanniakoil, Madgadipet and Thirukannur were set up in Puducherry region alone. Further 3 entry checkposts were set up at Vanjore, Nandalar and Ambagarathur in Karaikal. The revenue collection from these 7 new Checkposts alone during 2016-17 comes to Rs.6.20 Crores. The checkpost wise entry permit tax collection are detailed below:

| | | | |
|---|---|---|---|
| (i) | Kanagachettikulam | .... | Rs.1,47,20,415.00 |
| (ii) | Kanniakoil | .... | Rs.1,10,88,673.00 |
| (iii) | Madagadipet | .... | Rs. 85,85,625.00 |
| (iv) | Thirukannur | .... | Rs. 18,59,540.00 |
| (v) | Vanjore | .... | Rs.1,43,61,225.00 |
| (vi) | Nandalar | .... | Rs. 80,29,047.00 |
| (vii) | Ambagarathur | .... | Rs. 33,56,709.00 |
| | | | Rs.6,20,01,234.00 |

Earlier the Transport Department's head office in Puducherry was the only Office in Puducherry for registration of vehicle and issue of Driving Licence. From the year 2015 onwards Taluk wise branch Offices have been set up for this purpose. New sub-ordinate offices have been set up for this purpose at Saram for Oulgaret Taluk, at Thirubhuvanai for Villianur Taluk and Kattukuppam for Bahour Taluk and they have started functioning. The new Sub-Offices set up in Thirubuvanai and Kattukuppam which is atleast 20 Km. and 15 Km.from Puducherry. It is worthmentioning that in the financial year 2016-17, in Thirubuvanai 9227 No. Of vehicles have been registered and in Kattukuppam 2945 No. of vehicles have been registered.

The system of issuing permits for transport vehicles which was carried out only in Puducherry have now been delegated to Officials in Karaikal, Mahe and Yanam to cater to the requirement of the local population. Even in Puducherry, transport permits are being issued in the sub-ordinate offices at Oulgaret, Thirubhuvanai and Kattukuppam. Further during the closure of every financial year Special Camp for collection of road taxes are being organised.

Increase in number of entry checkposts, setting up of sub-ordinate offices, delegation of powers related to issue of permits, special camp for collection of road tax are some of the initiatives made which has resulted in increase on revenue collection and vehicle registration. It is also notable that the vehicle registration which was 57,454 in the year 2015-16 has increased to 67,226 in the year 2016-17 and this has further increased the revenue collection of the Government through Transport Department.

GOVT. OF PONDICHERRY ★ TRANSPORT DEPARTMENT ★

**(S.D. SUNDARESAN)**
**TRANSPORT COMMISSIONER**

புதுச்சேரி அரசு
போக்குவரத்துத் துறை

**No.4/TD/TC/PA/2017** **Puducherry, dt. 11.04.2017**

**செய்திக் குறிப்பு**

**சென்ற நிதி ஆண்டில் போக்குவரத்துத் துறையின் வருவாய் 25% அதிகரிப்பு**

புதுச்சேரி போக்குவரத்துத் துறையில் கடந்த 2015-16 நிதி ஆண்டில் ரு.69.06 கோடியாக இருந்த வருவாய் 2016-17 நிதி ஆண்டில் ரு.86.86 கோடியாக உயர்ந்துள்ளது. சென்ற 2016-17 நிதி ஆண்டின் வருவாய் முந்தைய ஆண்டைக்காட்டிலும் சுமார் 25% அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

முன்னர் புதுச்சேரியில் கோரிமேடு சோதனைச் சாவடியில் மட்டுமே போக்குவரத்து வாகன நுழைவு பெர்மிட் வழங்கிவந்த நிலையில், 2013 ஆண்டு முதல் கன்னியக்கோயில், கனகசெட்டிகுளம், மதகடிப்பட்டு மற்றும் திருக்கனூர் ஆகிய நான்கு இடங்களில் பெர்மிட் வழங்கும் சோதனைச் சாவடிகள் அமைக்கப்பட்டுள்ளன. மேலும் காரைக்கால் பகுதியில் வாஞ்சூர், நண்டலார் மற்றும் அம்பகரத்தூரில் ஆகிய மூன்று இடங்களில் இவ்வகை சோதனைச் சாவடிகள் தொடங்கப்பட்டு இயங்கி வருகின்றன. கடந்த 2016-17ம் ஆண்டில் கீழ் கண்ட 7 சோதனைச் சாவடியிலிருந்து இத்துறையின் மூலம் கிடைத்த வருவாய் சுமார் ரூபாய் 6.20 கோடியாக உள்ளது. புதிததாக தொடங்கப்பட்ட சோதனைச் சாவடியிலிருந்து பெறப்பட்ட நுழைவு வரி வருமானம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| | | | |
|---|---|---|---|
| (i) | கனகசெட்டிக்குளம் | .... | ரு.1,47,20,415.00 |
| (ii) | கன்னியக்கோயில் | .... | ரு.1,10,88,673.00 |
| (iii) | மதகடிப்பட்டு | .... | ரு. 85,85,625.00 |
| (iv) | திருக்கனூர் | .... | ரு. 18,59,540.00 |
| (v) | வாஞ்சூர் | .... | ரு.1,43,61,225.00 |
| (vi) | நண்டலார் | .... | ரு. 80,29,047.00 |
| (vii) | அம்பகரத்தூர் | .... | ரு. 33,56,709.00 |
| | மொத்தம் | | ரு.6,20,01,234 |

புதுச்சேரியில் போக்குவரத்துத் துறை அலுவலகத்தில் மட்டுமே வாகன பதிவு மற்றும் ஓட்டுனர் உரிமம் வழங்கி வந்த நிலைமை மாறி 2015 முதல் ஒவ்வொரு தாலுகா மக்களின் தேவைகளுக்காகவும் தனித்தனியாக போக்குவரத்து கிளை அலுவலகங்கள் செயல்பட்டு வருகின்றன. உழவர்கரை தாலுகாவினருக்காக சாரத்திலும், வில்லியனூர் தாலுகாவினருக்காக திருபுவனையிலும், பாகூர் தாலுகாவினருக்காக காட்டுக்குப்பத்திலும், தனித்தனி கிளை அலுவலகங்கள் தொடங்கப்பட்டு இயங்கிவருகின்றன. புதுச்சேரியிலிருந்து 20 கி.மீ. மற்றும் 15 கி.மீ தொலைவில் திருபுவனை மற்றும் காட்டுக்குப்பம் ஆகிய இடங்களில் இரண்டு புதிய கிளை அலுவலகங்கள் தொடங்கப்பட்டுள்ளது. இதன் பயனாக கடந்த 2016-17ம் நிதி ஆண்டில் திருபுவனையில் 9227 வாகனங்களும் மற்றும் காட்டுக்குப்பத்தில் 2945 வாகனங்களும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

புதுச்சேரியில் மட்டுமே போக்குவரத்து வாகனங்களுக்கு பெர்மிட் வழங்கும் நிலை இருந்து வந்தது. காரைக்கால், மாஹே மற்றும் ஏனாம் பகுதி மக்கள் அந்தந்த பகுதியிலேயே வாகன பெர்மிட் வழங்கும் நடைமுறை அமுலுக்கு வந்துள்ளது. புதுச்சேரியில் தலைமை அலுவலகம் மட்டுமல்லாது, சாரம், திருபுவனை மற்றும் காட்டுக்குப்பத்தில் இயங்கி வரும் கிளை அலுவலகங்களிலும் வாகன பெர்மிட் வழங்கும் நடைமுறை அமுலுக்கு வந்துள்ளது. மேலும் ஒவ்வொரு ஆண்டும் இறுதி வாரங்களில் வாகன வரி வசூலிக்க சிறப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டு வரி வசூலும் துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

சோதனைச் சாவடிகளின் எண்ணிக்கையை அதிகப்படுத்தியது, புதிய கிளை அலுவலக தொடக்கம், எளிமைப்படுத்தப்பட்ட பெர்மிட் வழங்குமுறை, வரி வசூல் செய்ய சிறப்பு ஏற்பாடு போன்றவைகளால் சாலை வரி முழுமையாக வசூல் செய்வதுடன் வாகனப் பதிவு எண்ணிக்கையும் உயர்ந்துள்ளது. 2015-16ஆம் நிதி ஆண்டில் வாகனப் பதிவு 57,454 என்ற நிலையில் 2016-17 நிதி ஆண்டில் வாகனப்பதிவு 67,226ஆக உயர்ந்துள்ளது; இதன் தொடர்ச்சியாக அரசின் வருவாயும் அதிகரித்துள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

GOVT. OF PONDICHERRY TRANSPORT DEPARTMENT

(எஸ்.டி.சுந்தரேசன்)
போக்குவரத்து ஆணையர்